**பெரம்பலூர் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் செயல்முறைகள்**
**முன்னிலை: திருமதி.ப.ஸ்ரீ வெங்கட பிரியா, இ.ஆ.ப.,**

ந.க.எண்.3271/2018/பஅ2 நாள்: 08.02.2022

பொருள்: பணியமைப்பு - ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி அலகு - பெரம்பலூர் மாவட்டம் - தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம், பெரம்பலூர் - 21.08.2018 அன்று பணியிடையே காலமான ஈப்பு ஓட்டுநர், சி.ரவிச்சந்திரன் என்பவரின் வாரிசுதாரரும், மனைவியுமான வனஜா (திருமதி) ப.- கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராக தற்காலிகமாக பணியமர்வு செய்யப்பட்டது - பணிவரன்முறை செய்து உத்தரவிடுதல்.

பார்வை:
1) திருமதி.ப.வனஜா, க/பெ.சி.ரவிச்சந்திரன்(லேட்), பெரம்பலூர் என்பவரின் விண்ணப்பம் நாள்: 08.10.2018.
2) பெரம்பலூர் வட்டாட்சியரின் ஒருங்கிணைந்த சான்றிதழ் ப.மு.எண். அ5/294/2021, நாள்.25.02.2021.
3) இணை இயக்குநர், அரசு தேர்வுகள் இயக்ககம், சென்னை கடித எண்242957/2019/வி3, நாள்: .07.2019.
4) அரசாணை (நிலை) எண். 18, தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் (க்யூ.1)துறை, நாள் 23.01.2020.
5) பெரம்பலூர் மாவட்ட ஆட்சித் தலைவரின் செயல்முறைகள் நக.எண். 3271/2018/பஅ2, நாள். 16.09.2019.
6) பெரம்பலூர் மாவட்ட ஆட்சித் தலைவரின் செயல்முறைகள் நக.எண். 3271/2018/பஅ2, நாள். 21.09.2020.
7) அரசாணை (நிலை) எண். 48, தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத்துறை, நாள் 26.02.2020.
8) அரசுக் கடிதம் எண்.6895/2021-5/இ3, நாள்: 14.12.2021.
9) இயக்குநர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்ககம், சென்னை கடிதம் ந.க.எண்.18355/2021/டி2, நாள்: 18.12.2021.

******

**உத்தரவு:**

பெரம்பலூர் மாவட்ட ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி அலகில், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தில் ஈப்பு ஓட்டுநராகப் பணிபுரிந்து 21.08.2018 அன்று பணியிடையே காலமான சி.ரவிச்சந்திரன் என்பவரின் வாரிசுதாரர்களுள் ஒருவரும், மனைவியுமான திருமதி.ப.வனஜா என்பவருக்கு பார்வை 5–இல் காணும் செயல்முறைகளின்படி கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளர்-ஆக தற்காலிகமாக பணியமர்வு செய்யப்பட்டு 23.09.2019 முற்பகல் முதல் பணிபுரிந்து வரும் நேர்வினை தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் இசைவினைப் பெற்று, முறையாக பணியமர்த்தி அரசால் பணிவரன்முறை செய்யும் பொருட்டு பார்வை 6-இல் காண்டுள்ளவாறு முன்மொழிவுகள் அனுப்பி வைக்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து பார்வை 8-இல் காணும் அரசாணை பத்தி எண்.5.1-இல் 02.02.2016 முதல் 31.12.2019 வரை கருணை அடிப்படையில் பணியமர்த்தப்பட்டு, விதித்தளர்வு மற்றும் அரசாணைகளுக்கு விலக்கு தேவைப்படாத அனைத்து பணியாளர்களின் பணி நியமனமும் நடைமுறையில் உள்ள விதிகளுக்குட்பட்டு நியமன அலுவலரின் ஒருநிலை கூடுதல் அதிகாரம் பெற்ற அலுவலரால் பணிவரன்முறை செய்திட தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், தனியரால் சமர்ப்பிக்கப்பட்ட அசல் ஆவணங்கள் அனைத்தும் ஆய்வு செய்யப்பட்டதில், திருமதி.ப.வனஜா என்பவர் கருணை அடிப்படையில் பணிநியமனத்திற்கான அனைத்து தகுதிகளையும் பெற்றுள்ளதால் பெரம்பலூர் மாவட்ட ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி அலகில், தமிழ்நாடு அமைச்சுப்பணியில் இளநிலை உதவியாளர் பதவியில் **23.09.2019 முற்பகல்** முதல் தனியரின் பணியினை வரன்முறை செய்து இதன்வழி உத்தரவிடப்படுகிறது.

மேற்படி பணிவரன்முறை செய்யபடுவதால் தனியரின் ஆண்டு ஊதிய உயர்வுகள் மற்றும் ஊதிய நிலுவை ஏதும் இருப்பின் அவற்றை பெற உரிய விதிகளின்படி தகுதியுடையவராகிறார்.

மாவட்ட ஆட்சியருக்காக,
பெரம்பலூர்.

பெறுநர்

திருமதி.ப.வனஜா,
இளநிலை உதவியாளர்,
மாவட்ட ஆட்சியரகம் (வளர்ச்சி),
பெரம்பலூர் - உரியவழியாக

8/2/22

**நகல்:** இயக்குநர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்ககம், சென்னை - 600 015.
**நகல்:** பஅ3 - பிரிவிற்கு.
**நகல்:** பஅ2 - இருப்புக் கோப்புக்கு.

மே.இ.ந.க.எண். 0672/2022/பஅ3
நாள் 24.02.2022

மாவட்ட ஆட்சியரகம் (வளர்ச்சி),
பெரம்பலூர்

நகல் சார்வு செய்யப்படுகிறது.

மாவட்ட ஆட்சித்தலைவரின்
நேர்முக உதவியாளர் (வளர்ச்சி)
பெரம்பலூர்.

பெறுநர்:

திருமதி. ப. வனஜா,
இளநிலை உதவியாளர்,
மாவட்ட ஆட்சியரகம் (வளர்ச்சி), பெரம்பலூர்.

24.02.2022

நகல்:
பஅ2 பிரிவுக்கு.